
# கொரானாவுக்கு எதிரான தற்காப்பு உடையதாகத் தன் கடையைத் தயார்ப்படுத்தி விட்டார் கோவிந்தன்.

கோவிட்-19: இந்திய விஞ்ஞானிகளின் பதில்
ஒரு தன்னார்வக் குழு

IndiSciCovid

https://indscicov.in/



கடை மீண்டும் திறக்கப்பட்டுவிட்டதில் கோவிந்தன் நாயருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவரது பலசரக்குக்கடை கடந்த 10 நாட்களாக மூடப்பட்டிருந்தது. 10 நாட்கள்தானா? வருடக்கணக்கில் ஆனதுபோல் அவருக்குத் தோன்றியது. இந்த முடக்கம் இன்னும் தொடர்ந்தாலும் பலசரக்கு என்பது அத்யாவசியப் பொருள் என்பதால் மளிகைக்கடை திறந்திருக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் முதல் நாளே, ஆட்சேபணை செய்த ஒரு காவலருக்கு இதை விளக்கிச் சொல்வதில் ஏற்பட்ட சிரமத்தால், கடை திறப்பதைக் கைவிட்டுவிட்டார். கடைக்குச் செல்வதும் அவ்வளவு எளிதானதாக இல்லை. ஸ்கூட்டரில்தான் அவர் கடைக்குப் போவார்.ஆனால் காவலர்களோ இருசக்கர வாகனங்களை மடக்குவதிலேயே குறியாக இருக்கின்றனர்.

இப்ராகிம்மோடும் சாக்கோவோடும் இது குறித்துப் பேசிக்கொண்டிருப்பார். அவர்கள் கடைகளும் அங்குதான் இருக்கின்றன. சரக்கு கொள்முதல் செய்வதில் ஏற்பட்டி ருக்கும் சிரமம், அவர்களையும் கடைகளை மூடும்படி செய்துவிட்டது. அவர்களது கடைகளும் மிகச் சிறியவை. மிகக் குறுகலான நடைபாதை கொண்ட ,

12' x 10' கடைகள். அந்தக் கட்டடத்தில் கோவிந்தன் கடையோடு, ஒரு செருப்புக்கடை, ஒரு ரெடிமேடு ஆடைகள் கடை, ஒரு பேன்ஸி ஸ்டோர் என 4 கடைகள். மாடியில், ஒரு பிரௌசிங் சென்டர், ஒரு போட்டோ ஸ்டூடியோ, ஒரு ரியல் எஸ்டேட் தரகர் கடை. எல்லாம் மூடப்பட்டுவிட்டதால் அனைவருக்கும் இந்த ஒரு மாதத்தில் பெருத்த நஷ்டம். இவர்களைப் பார்க்க, கோவிந்தன் நிலைமை எவ்வளவோ பரவாயில்லை.




வழக்கமாக, காலை முதல் இரவு வரை கோவிந்தன் கடையில்தான் இருப்பார். பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும், அவர் மகன் உன்னியும் உடன் இருப்பான்.

கோவிந்தன், வீட்டுக்குச் சாப்பிடவும் ஓய்வெடுக்கவும் செல்லும் போது, கடையைப் பார்த்துக்கொள்வான். வாடிக்கையாளர் வீடுகளுக்கும் போய் மளிகைச் சாமான்களை விநியோகித்தும் வருவான்.

முடக்க அறிவிப்பை ஒட்டி, இப்போது நிலைமை ஓரளவு சரியாகிவருகிறது. மீண்டும் கடையைத் திறக்கலாம். அனுமதிக்காகக் காவல் நிலையத்துக்குக் கோவிந்தன் சென்றார். கடையைத் திறக்க சில நிபந்தனைகளை விதித்து, அரசு வெளியிட்ட ஒரு அறிவிப்புத் தாளினை கோவிந்தனிடம் கொடுத்தனர். என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்பதற்கான அறிவிப்புத் தாள் அது.

1. வாடிக்கையாளரைக் கடைக்குள் அனுமதிக்கலாம்: கோவிந்தனும் அவர் மகனும் மட்டுமே இருக்கப் போதுமான சின்னக் கடைக்குள் வாடிக்கையாளரை அனுமதிப்பது என்பது சாத்தியமற்றது.

2. வாடிக்கையாளர்கள் உரிய இடைவெளி விட்டு நிற்க வேண்டும்: இதற்காகக் கடைக்கு வெளியே உரிய இடைவெளி கொண்ட வட்டங்கள் வரைந்து வைத்தார். ஆனால் இதை வாடிக்கையாளர்கள் பின்பற்றுவார்களா என்பது தெரியாது. "பாண்டி விளையாட்டில் உள்ளது போல, வாடிக்கையாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வட்டத்திற்குள் நிற்கவும்" என்று எழுதி, அதைக்



கடைக்கு வெளியே அறிவிப்பாக ஒட்டி வைத்தார். அவ்வப்போது, உன்னியை விட்டு, வட்டத்தைப் புதிப்பிக்கச் செய்வார்.

சரக்குக் கொள்முதல் செய்யும்போது, போதிய 'இடைவெளி பேணுதல்' என்பது, கோவிந்தனுக்கு எளிதாகவே இருக்கிறது. ஆனால் இப்போதைக்கு அதற்கான அவசியமும் இல்லை. அவசரமும் இல்லை. பொதுவாக, கோவிந்தன் மொத்த வியாபாரிகளிடம்தான் கொள்முதல் செய்வது வழக்கம். ஆனால் தற்போது அப்படிச் செய்ய முடியுமா என்பது தெரியவில்லை. எந்த வண்டியும் ஓடவில்லை. ஸ்கூட்டரையும் அனுமதிப்பதில்லை.

கோவிந்தன் முகக்கவசம் அணிந்திருக்கிறார். துணியாலான முகக்கவசங்கள் அவரிடம் இருக்கின்றன. அவற்றைத் துவைத்து, உலர்த்தி மீண்டும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆனால் கைக்குக் கவசம்? தலைக்குக் கவசம்? உடலுக்குக் கவசம்? இவற்றில் எதுவும் அவரிடம் இல்லை. மேலும், இந்தக் கோடை வெயிலில் இவற்றை அணிந்து வேலை செய்ய முடியுமா? எல்லாக் கடைகளும் மூடியிருக்கும்போது எங்கே போய் இவற்றை வாங்குவது?

முகக்கவசம் அணியச் சொல்லி வாடிக்கையாளரிடம் சொல்லலாம், ஆனால் வற்புறுத்த முடியாது. காவல் துறை இதில் வந்து உதவி செய்யுமா?

சோப்பு நீர், இந்த வைரஸை அழித்துவிடும் என்பதாக கோவிந்தன் செய்தித் தாளில் படித்திருக்கிறார். சோப்பு நிறையவே இருக்கிறது. எனவே, கடைக்கு வெளியே சோப்பு நீரை ஒரு வாளியில் வைத்திருக்கத் தீர்மானித்தார். அடிக்கடி புதிதாக மாற்றிக்கொள்ளவும் செய்யலாம். இன்னும் சற்று எச்சரிக்கையோடு,சோப்புத் தண்ணீரால் கடையின் சகல மேற்பரப்பையும் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளலாம்.



இருமலோடு வருபவரை வெளியிலேயே நிறுத்தி, பொருட்களைப் பெற்றுக்கொள்ளச் செய்யலாம். தற்காப்புக் கருதி என்னென்ன செய்ய வேண்டும் என்று கோவிந்தன் உன்னிக்கு அடிக்கடி அறிவுறுத்திக்கொண்டும் இருக்கிறார்.

இப்போது, வீடுகளுக்குச் சென்று பொருட்களை விநியோகிக்கலாம் என்றாலும், உன்னியால் சைக்கிளில் அதிக தொலைவுக்குச் செல்ல முடியாது. வாடிக்கையாளர் வீடுகளுக்குச் செல்லும்போது உன்னி முகக்கவசம் அணிந்திருப்பான். அவர்கள் வீட்டுக்குள் செல்ல மாட்டான். மளிகைப் பெட்டியை வெளியே வைத்துவிடுவான். அவர்கள் வெளியே வந்து உரிய பணத்தை அதற்கென உள்ள கூடையில் போட்டுவிட்டுப் பொருட்களை எடுத்துச் செல்லும்வரை காத்திருப்பான். இந்த நியதிகளை உன்னியிடம் அடிக்கடி கோவிந்தன் அறிவுறுத்துவார். உன்னிக்கு இருமல், காய்ச்சல் அறிகுறி ஏதாவது ஏதாவது தென்பட்டால் உடனடியாகக் கடையை மூட நேரிடும். உன்னி இளைஞன் என்பதால், இவையெல்லாம் அவனுக்குப் புதிதாகவும் கிளர்ச்சி தரக்கூடியதாவும் இருக்கின்றன. ஆனால், கோவிந்தனுக்குச் சற்றுக் கவலையாய் இருக்கிறது.



கோவிந்தனை அதிகமும் கவலைக்குள்ளாக்கிய பிரச்சினை, அந்தக் கட்டடத்தில் இடம்பெற்றிருந்த, சின்னஞ் சிறு கழிப்பறைதான். 10 நாட்களாய் யாருமில்லை என்பதால், தண்ணீர் மற்றும் மின்வசதி நிறுத்தப்பட்டிருந்தது. வீட்டுக்காரரிடம் தன் கடைக்காக வாதாடி இவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டாலும், தண்ணீர் என்னவோ காப்பி நிறத்தில் வருகிறது.

கோவிந்தன், வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பான முறையில் பொருட்கள் வழங்குவதற்குத் தயார்படுத்திக்கொண்டுவிட்டார். தண்ணீர் மட்டும் நல்லதாகக் கிடைக்குமானால், கடையையும் சுற்றுப்புறத்தையும் அடிக்கடி கிருமி நாசினி கொண்டு இன்னும் தூய்மைப்படுத்தி, கொரானாவுக்கு எதிரான பாதுகாப்பை இன்னும் பலப்படுத்திவிடுவார்.

இக்கதைகள் வழக்கமான காட்சிகளை சித்திரிக்கின்றன , இங்குள்ள தகவல்களை சூழலில் பொருந்துகின்றன. இவ்வாறு செய்யும் போது எளிமைப்படுதலை தவிர்க்க இயலாது. எங்கள் இணையத்தளத்திலுள்ள பிற அறிவியல் தகவல்களோடு சேர்த்து கருதவும்.

